Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49 | மலர் 15
போன் 389 | தேசிய தினசரி | இதழ் 302

யாழ்ப்பாணம் கார்த்திகை 27 ஷவ்வால் 24 திங்கட்கிழமை (13-12-71)

உங்களுக்குத் தேவையான
இலங்கையில் தயாரிக்கப்பெற்ற
மட்பாண்ட
மலசலகூட
பாவனைப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
கதிர் ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி றேட்
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

## 'பாகிஸ்தானின் விரோதியல்ல பாரதம்'

புதுடில்லி, டிச 12
'பாரதத்துக்கு எதிராக மிரட்டல்கள் விடுக்கப் படுகின்றன. போரை எதிர்த்து, ஜனநாயகத்தை உபதேசித்த ஒரு நாடு இப்போது இந்த மிரட்டலை விடுத்துள்ளது. உலகவல்லரசுகளிடமுள்ள வலு பாரதத்திடம் கிடையாது. ஆனாலும் அந்தச்சிறிய நாட்டின் பக்கத்தில் நீதி இருக்கிறது' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று டில்லியில் கூறினார்.
'பாரதத்தைக் கம்யூனிஸத்திலிருந்து மீட்கப் போவதாகக் கூறிய அந்த 'மிரட்டும்' நாடு, சிறுவை மா பெரும் நாடு என்று இப்போது கூறுகிறது' என்றும் அவர் சொன்னார்.
டில்லியில் நடந்த மாபெரும் கூட்டத்தில் இன்று உரையாற்றுகையிலே பிரதமர் இந்திரா மேற்கண்டவாறு சொன்னார்.
'எந்த நாட்டையும் அழிக்க வேண்டுமென்ற எண்ணமோ, பிடித்துவிட வேண்டுமென்ற பேராசையோ பாரதத்துக்குக் கிடையாது. குறிப்பிட்ட லட்சியங்களுக்காகத் தான் பாரதம் போராடுகிறது' என்றும் அவர் பேசுகையில் சொன்னார்.
'பாரதம் வி[illegible] நாட்டைக் கைப்பற்றிவிட வேண்டுமென்ற மனப்பான்மை எமக்கில்லை. நிலைமையை ஐயத்திற்கிடமின்றி தீர்த்து வைக்க

(5 ம் பக்கம் பார்க்க)

# இந்திய 'பாரா' துடுப்புக்கள் டாக்கா அருகில் இறங்கின

## சோவியத் துணை அமைச்சர் புதுடில்லி வந்தார்

புதுடில்லி, டிச. 12

இந்திய விமானப்படையைச்சேர்ந்த 'பாரா' துருப்புகள் இன்று இறக்கப் பட்டதையடுத்து, கிழக்கு வங்கத் தலைநகரான டாக்கா எந்தச்சமயத் திலும் இந்தியாவிடம் வீழ்ச்சியுறும்கட்டத்தை எதிர்நோக் குகிறது.

ஹெலிஹொப்டர்கள் மூலம் இறக்கப்பட்ட பாரததுருப்புகள் உத்தரவுகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பலவழிகளிலும் இந்தியப்படைகள் தம்மை சூழ்ந்துகொண்டிருப்பதால் இன்னமேலும் தொடர்ந்து சண்டை செய்வதா அல்லது சரணடைவதா என்று முடிவுசெய்யமுடியாத தர்மசங்கடமான நிலையில் கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள பாகிஸ்தான் ராணுவத் தலைமைப்பீடம் இருக்கின்றதாம்.

இறுதிவரை போராடும்படி இவர்களுக்கு மேற்குப்பாகிஸ்தான் தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளதாம்.

சோவியத் வெளிஉறவு முதல் துணை அமைச்சர் திரு. குஸ்னட்சோ தலைமையில் உயர்தரத் தூதுக்குழுவொன்று இந்தியாவுக்குள் வந்துள்ளது.

ஜம்முகாஷ்மீரில் கார்கில் அரங்கில் இந்தியப் படைகள் மேலும் 2 பாகிஸ்தானியரின் காவல் நிலைகளை அழித்திருக்கிறார்கள். அதே சமயம் இந்திய காவல்நிலைகள் பலவற்றை தம் படைகள் கைப்பற்றிவிட்டதாக பாகிஸ்தான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சிந்துப் பகுதியில் பாகிஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## காஷ்மீர் முதல்வர் சாதிக் மரணம்

ஜம்மு காஷ்மீர் முதல் அமைச்சர் திரு. ஜி. எம். சாதிக் இன்று காலை சண்டிகாரில் மரணமானார். நெடுங்காலமாகவே நோய்வாய்ப் பட்டிருந்த அவர் மரணமாகையில் வயது 59. சடலம் இன்று ஸ்ரீநகருக்குக் கொண்டுபோகப்படுகின்றது. ஜம்மு காஷ்மீரில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மதிப்புக்குரியவரும், மதசார்பற்ற செயல்வீரருமான திரு. சாதிக் மறைவு பற்றி கேள்வியுற்ற தாம் அதிர்ச்சியுற்றதாக இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி கூறினார்.

திரு. சையத் மீர்காஸிம் ஜம்மு காஷ்மீரின் புதிய முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்

(6-ம் பக்கம் பார்க்க)

### திருமணம்

மணமகன்: திருவளர் செல்வன் பொ. கந்தசாமி
[இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பு]
சாவகச்சேரி வடக்கு சி. பொன்னையா அவர்களின் ஏகபுத்திரன்.
மணமகள்: திருவளர் செல்வி புஷ்பலீலாவதியம்மா
நேரம்காலம்: 15-12-71 புதன்கிழமை காலை 10-30 தொடக்கம் 11-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தம்.
இடம்: மணமகள் இல்லம் 'புஷ்ப பவனம்' கைதடி
உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வி. வல்லிபுரமும [கண்ணகைஅம்மன் போக்குவரத்துச்சேவை]தலைவரும் பாரியாரும் "இலட்சுமி பவனம்" சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி.

க. தம்பிப்பிள்ளையும் [கைதடி நாவற்குழி கிராமசபை முன்னாள் தலைவரும் லீலாவதி ஸ்ரோர்உரிமையாளரும்] பாரியாரும் "புஷ்ப பவனம்" கைதடி.

3806

## சுவீப் முடிவுகள்

### மரண அறிவித்தல்

#### ச. கணபதிப்பிள்ளை

திருமதி சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், திரு. தர்மலிங்கம் (உரிமையாளர் லிங்கம் ரெக்ஸ்ரைல்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம்), செல்வி தங்கம்மா (Staff Nurse பெரியாஸ்பத்திரி யாழ்ப்பாணம்), திரு. செல்வத்துரை, செல்வன் அமிர்தலிங்கம் (பரமேஸ்வராக்கல்லூரி), திருமதி சரஸ்வதி மகேஸ்வரன், செல்விகள் கமலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் தந்தையும், திரு. S. மகேஸ்வரன் (உரிமையாளர் யாழ்ப்பாணம் எலக்ரிக்கல்ஸ்) அவர்களின் மாமனாரும் ஆகிய திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்களின் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏரதடி (ஆவரங்கால்) மயானத்திற்கு திங்கட்கிழமை (13-12-71) காலை 11 மணிக்கு அன்னாரின் ஆவரங்கால் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப் படும்.

3809

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3790

அப்பளம் தயாரிப்புக்கேற்ற உழுந்துமா நவீன இயந்திரங்கள் மூலம், அனுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து அரித்து கொடுக்கப்படும், விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். முகாமை இரைண்டிங் மில்ஸ் 443, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 3754

### தேவை

நெசவு வேலை தெரிந்தவர்களும் பழக ஆர்வமுள்ள பெண்களும் தேவை. தங்குமிடம் வசதிகள் உண்டு. நேரில் சமுகந்தரவும். செ. காசிப்பிள்ளை அன் கோ, 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3348

### வைத்தியம்

வாதம், இரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்தியசாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

### விற்பனைக்கு

மருந்துகள் மருந்துச் சரக்குகள் சித்த ஆயுர்வேத ஆங்கில மருந்துச் சரக்குகள் சிறந்த முறையில் மலிவாகக் கிடைக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3789

### தேவை

நெசவு ஆசிரியை தேவை. நெசவுப் பயிற்சி பெற்றவராகவும் டொபி (Dobby) வேலை தெரிந்தவராகவும் இருக்கவேண்டும். எதிர்பார்க்கும் வேதனத்தைக் குறித்து 1-1-72க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் முகாமையாளர், "மெறில் இன்டஸ்றி" கரவெட்டி. 3805

## ரயில் போக்குவரத்து தாமதம்

பருத்தித்துறை, ஞாயிறு கொடிகாமத்தில் பலத்த மழை காரணமாக புகையிரதச் சேவையும், பஸ் சேவையும் பாதிக்கப்பட்டன. கொடிகாமத்துக்கு அண்மையில் பாரிய இரு மரங்கள் விழுந்ததால் நேற்று முன்தினம் கொழும்பு வண்டி பலமணி நேரம் தாமதமாகியது. இதன் விளைவாக அதிகாலை மின்நொச்சியை மட்டும் சென்றடையக்கூடியதாயிருந்தது.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பாஷையூர் சந்தையிலுள்ள கடை அறைகள் இல 1×2 ஏல விற்பனை

1-1-72 தொடக்கம் 31-12-72 வரையுள்ள காலத்திற்கு, மேற்படி சந்தையிலுள்ள கடை அறைகள் இல: 1X2 குத்தகை கொடுக்கப்பட இருப்பதால் இக்குத்தகை 17-12-71 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு பாஷையூர் சந்தையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
9-12-71. 3305

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு காலை 10-30
52 MILES TO TERROR
தினசரி, 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**தேவதாஸ்**

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, இரவு10-00
சனி, ஞாயிறு பி.ப.2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
**சந்திரோதயம்**

**சாந்தி**
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
**காதல் வாகனம்**

**RAJAH - Jaffna**
Daily 4 Shows
Victoria Vetri
and Robi Hawden
in
WHEN DI OSAURS
RULED THE EARTH
(Color)

**MANOHARA**
(Jaffna)
Daily 4 shows
Giuliano Gemma
Nino Bengenuti
(Also introducing heavy weight champion-1970)
in
ALIVE OR
PREFERABLY DEAD
(color)

**வெல்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-தேவிகா
**கர்ணன்**
[கலர்-புதிய கொப்பி]

## உபகிளை நிறுவப்பட்டது

மீசாலை, ஞாயிறு மாதோட்ட நகர் அருள் சொரியும் நன்றும் இங்கு அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வர ஆலயம் பாடல் பெற்ற தலம். இக்கோயிலுக்குரிய மூலஸ்தானத் திருப்பணி இனிது முடிய சைவ நன்மக்கள் நிதியுதவ முன்வரவேண்டும்" என்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருக்கேதீஸ்வரத் திருப்பணி நிதிச் சபையின் உபகிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசும்போது யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசம்பிள்ளை கூறினார்.

சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி இராசசபை இரண்டையும் சேர்த்து இக் கூட்டம் நடைபெற்றது.

தென்மராட்சி காரியாதிகாரி திரு ஆர் சிதம்பரம்பிள்ளை திரு என் சபாரத்தினம் ஆகியோரும் பேசினர்.

உபகிளை உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:

தலைவர் திரு பொன்னுச்சாமி, உபதலைவர்கள் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு எஸ், கனகரத்தினம், திரு என் சின்னத்துரை காரியதரிசி டாக்டர் கந்தசாமி, பொருளாளர் திரு வி சுப்பையா 17 பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஒழுங்கையை திருத்துக

சுழிபுரம், ஞாயிறு பண்டத்தரிப்பு நான்காம் வட்டாரத்திலுள்ள கேணிக்கட்டு ஒழுங்கை மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் சேறும் சகதியுமாக இருப்பதினால் அதனை வெகு விரைவில் திருத்தி உதவுக.

இவ்வாறு திருக்குறள் சனசமூகநிலையம் தனது நிர்வாகசபைக் கூட்டத்தில்தீர்மானமொன்றை நிறைவேற்றி பண்டத்தரிப்பு பட்டினசபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

**றீகல்** யாழ்ப்பாணம்
பி. ப 2-00 இரவு 10-00
எம் ஜி ஆர். - சரோஜாதேவி
எம் ஆர் ராதா
நடித்த
**குடும்பத் தலைவன்**
Daily 5-15 & 7-15 p. m
Ten Clerk
in
DARZANA
THE WILD GIRL
(Adults only-colour)

## புடவைக்கு புதிய கூப்பன் புள்ளி

மானிப்பாய், ஞாயிறு கூப்பனுக்குப் புடவை விநியோக முறையில் இம்மாதம் முதல் புதிய முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து 26-ம் தொடர் பங்கீட்டுப்புத்தகத்தின் 311-ம் இலக்கப்புள்ளியும் அடைவான அட்டையுமே கூப்பன் புடவை விநியோகத்துக்குச் செல்லுபடியாகும்.

ஒரு கூப்பனுக்கு 1 யார் வீதம். ஒரு வீட்டில் உள்ள கூப்பன்களின் அரைவாசித் தொகைக்கு மட்டுமே கூப்பன்புடவைகளை விநியோகிக்கும்படி தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. அ. மாணிக்கவாசகர் தமது கிளை முகாமையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

கூப்பன்புடவை எடுக்கச் செல்வோர் தம்முடன் தமது பொருள் பங்கீட்டு அட்டையையும் எடுத்துச் செல்லும்படி கேட்கப்படுகின்றனர்.

## பெற்றோர்தின விழா

சுழிபுரம், ஞாயிறு சுழிபுரம், அராலி, வட்டுக்கோட்டை சிறுவர் பாடசாலைகளின் பெற்றோர்தின விழா விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. சுழிபுரம் கிராம சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நடனம், பேச்சு, பாட்டு முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ஞாயிற்றுக் கிழமையில் மூடாதீர்


சுழிபுரம் ஞாயிறு கூட்டுறவுச்சங்கக் கடைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதால் ஓய்வுநாட்களில் அரிசிப் பங்கீட்டுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் அரசாங்கஊழியர்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர் என்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்இவர்களைத் திறந்து கிழமைநாளில் ஒன்றில் மூடும்படியும் வழக்கம் போல சனசமூக நிலையத்தினர் அரசாங்க அதிபருக்கும் கூட்டுறவு அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**யாழ். தியேட்டர்**
(காங்கேசன்துறை
Daily
4-00, 6-15 & 9-30 p. m.
BANCO FOR A KILLER,

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
சாவித்திரி
நடித்த
**பிராப்தம்**

**ரவணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன்
சாவித்திரி
நடித்த
**இரத்த திலகம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு: 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்



நடித்த
**என் அண்ணன்**

**லிடோ**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
வாணிஸ்ரீ
சாவித்திரி
அசோகன்
நாகேஷ்
சுந்தரராஜன்



நடித்த
**மனசாட்சி**



நத்தார் — புத்தாண்டு
**மலிவு விற்பனை**
[16-12-71 — 14-1-72]
சகலவிதமான
**தளபாடங்களும்**
மிகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
**மொடேர்ன் பேணிச்சர்**
79/2, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 7364.
கிளைகள்:
றோயல் பேணிச்சர், கண்டிவீதி, சாவகச்சேரி. | மணமகள் ஸ்ரோர்ஸ், 91, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 31409.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அரங்கு: பாகிஸ்தான் படைகள் வலுவுடன் போராடுகிறார்களாம்

## "மேலும் மூன்று முக்கிய நகர்களை பிடித்துவிட்டோம்" : இந்தியர் தகவல்

### மேற்கில் பயங்கர சண்டை நீடிக்கிறது

புதுடில்லி, டிச 12

கிழக்குப்பாகிஸ்தானில் சில்கட், கொமில்லா, ரங்பூர் போன்ற முக்கிய நகரங்கள் இன்னமும் பாகிஸ்தான் ராணுவ ஆதிக்கத்திலேயே இருப்பதாக பாகிஸ்தான் வானொலி இன்று அறிவித்தது. ஆட்பலம், ஆயுதபலம் போன்ற சகலஅம்சங்களிலும்மேலோங்கி விளங்கும் இந்திய படைகளை பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் தீரத்துடன் எதிர்த்துப் போராடி வருகிறார்கள் என்று பாகிஸ்தான் வானொலி கூறியது.

மேற்கு அரங்கில் ராஜஸ்தான் பகுதியில் இந்தியர் நேற்று இருதடவைகள் வலுத் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள் என்றும் அவைகளை பாகிஸ்தான் படைகள் வெற்றிகரமாக முறியடித்துவிட்டதாகவும் பாகிஸ்தான் அறிவித்தது. சம்ப் பகுதியில் இந்தியப் படைகளை பலமாகத் தாக்கி பின்வாங்கச் செய்ததாகவும் கூறினர்; ஜம்மு காஷ்மீரின் வடபகுதியில் இந்திய படைகள் நடத்திய பெரும் தாக்குதல் ஒன்றை முறியடித்ததாகவும் இந்திய தரப்பில் 4 அதிகாரிகள் உட்பட 161 பேர் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் அறிவித்தது. இங்கு மேலும் மூன்று கிராமங்களை பிடித்ததாகவும் அவர்கள் கூறினர்.

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகர் டாக்கா தம் படைகளிடம் மிக விரைவில் வீழ்ச்சியுறும் நிலையிலிருப்பதாக இந்திய அதிகாரிகள் கூறுகிறார்கள். கிழக்குப் பாகிஸ்தான் மேலும் மூன்று மாவட்டத் தலைநகரங்களைப் பிடித்துவிட்டதாகவும், மேற்கில் சம்ப் பகுதியில் முனவர்தாவி ஆற்றுக்கு அப்பால் பாகிஸ்தான் படைகளைத் துரத்திவிட்டதாகவும் இந்திய இராணுவத்தினர் கூறுகின்றனர்.

## மேலும் மூன்றுமுக்கிய நகரங்கள் வீழ்ச்சி

கிழக்குப் பாகிஸ்தானில் மேலும் மூன்று மாவட்ட தலைநகரங்கள் இந்தியர் வசம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இன்று அதிகாலையில் இந்திய அதிகாரிகள் அறிவித்தனர். இங்கு வேறுபல நகரங்களும்கூட இந்திய படைகளிடம் வீழ்ச்சியடைந்து விட்டதாக அவர்கள் தெரிவித்தனர்:

குஷ்தியா, நவாகாளி, மைமன்சிங் ஆகியவையே அந்த மூன்று முக்கிய மாவட்ட தலைநகரங்களாகும். மைமன்சிங் அரங்கில் விடுதலை படையினர் பிரமிக்கத்தகுந்த சில நடவடிக்கைகளை செய்து முடித்ததாக இந்திய ராணுவத்தினர் கூறினர். பிரமபுத்திரா ஆற்றை அவர்கள் கடந்து அக்கரைக்கு வெற்றிகரமாக சென்றுள்ளனராம்.

இப்பகுதிகளிலிருந்து பாகிஸ்தான் ராணுவ இப்பாய்கள் சிவிலியன் உடைகளில் தப்பிச்செல்வதாக கூறப்படுகின்றது. இங்கிருந்த ராணுவ நிலைகளை இந்திய படைகள் சென்று பார்த்தபோது ராணுவ உடைகள் தொங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டனவாம். பெண்களின் சேலைகள், உள் ஆடைகள் போன்றவையும் இங்கு காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

தலைநகர் டாக்காவை நோக்கி மிக வேகமாக இந்திய படைகளும் விடுதலைப் படையினரும் முன்னேறி வருகிறார்கள் என்றும் தலைநகரை பலபக்கங்களிலிருந்தும் இந்திய படைகள் நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டது. பாகிஸ்தான் படைகள் தப்பிச்செல்ல முடியாதபடி எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டதாகவும் இந்தியர் கூறினர்.

தப்பிச்செல்ல முயற்சி செய்ய வேண்டாம். சரணடைவதைவிட உங்களுக்கு வேறுவழியில்லை. தப்பிச்செல்ல முனைந்தால் மரணம் தான் சம்பவிக்கும் என்று இந்திய ராணுவத்தினர் பாகிஸ்தான் படைகளுக்கு அறிவித்து வருகின்றனர். சரணடையும் பாகிஸ்தான் படைகள் போர்க்கைதிகளுக்குரிய மரியாதைகளுடன் ஜெனிவா ஒப்பந்தத்துக்கு ஏற்ப நடத்தப்படுவார்கள் என்று இந்திய முப்படை சேனாதிபதி ஜெனரல் மானெக்ஷா ஏற்கனவே அறிவித்திருக்கிறார். இதற்கிடையில் கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள பாகிஸ்தான் படைகளின் பத்திரத்துக்கு

புதுடில்லி, டிச.12

கிழக்குப் பாகிஸ்தானில் இந்திய படைகளிலுள்ளவர்களைத் தாக்க கொள்ளப்பட்டுள்ள பாகிஸ்தான் படைகளில் பலர் சரணடைந்துள்ளதாக இந்திய ராணுவத்தினர் அறிவித்துள்ளனர். ஆனால் டாக்காவை இந்தியர் தாக்கினாலும்கூட பாகிஸ்தான் படைகள் ஒருபோதும்சரணடையமாட்டார்கள் என பாகிஸ்தான் ராணுவத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானில் சமால்பூர் என்ற இடத்தில் 581 பாகிஸ்தான் துருப்புகள் தளபதியுடனும் ஆயுதங்கள் வெடிமருந்துகளுடனும் இந்திய படைகளிடம் சரணடைந்ததாக இந்தியர் அறிவித்தனர். இதுவரை 2,200க்கு அதிகமான பாகிஸ்தான் சிப்பாய்கள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

---

உத்தரவாதம் தரும்படி ஐ. நா. பொதுச் செயலாளரிடம் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி ஒருவர் கோரியிருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

## 16 மணி நேரத்தில் 3 ஆயிரம் பேர் பலி

மேற்கு அரங்கில் நேற்று சுமார் 16 மணிநேரத்தில் இருதரப்பிலும் மூவாயிரம் ராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்று ஒரு செய்தி கூறுகின்றது. முனவர்தாவி என்றஇடத்தில் நேற்று முன்தினம் பாகிஸ்தானியர் ஆரம்பித்த வலுத்தாக்குதல் ஒன்றை நேற்று இந்திய முறியடித்து விட்டதாகக் கூறினர். முனவர்தாவி ஆற்றின் இக்கரையிருந்த பாகிஸ்தான் படைகள் அனைத்தையுமே அடித்துத் துரத்திவிட்டதாக இந்தியர் கூறினார்கள். ஆற்றின் இக்கரையில் இப்பொழுது ஒரு பாகிஸ்தானிய சிப்பாய்கூட இல்லையென்று கூறப்பட்டது. ஆற்றின் அக்கரைக்கு பாகிஸ்தான் துருப்புகள் பின்வாங்கிய பின்னர் சம்ப் பகுதியில் அமைதியை வைத்தாலும், இன்னுமொரு வலுத்தாக்குதலுக்கு அவர்

கள் ஆயத்தம் செய்வதாக இது இருக்கலாம் என்றும் இந்தியர் கருதுகிறார்கள்.

இப்பகுதியில் இதுவரைக்கும் ஆறுதடவைகள் பாகிஸ்தானியர் வலுத்தாக்குதல்களை ஆரம்பித்தனர் என்றும் அவை அனைத்தையுமே தாங்கள் முறியடித்துவிட்டதாகவும் இந்தியர் கூறினார்கள்.

இப்பகுதியில் வால்டகதூர் சேத்திரி என்ற ஒரு சிப்பாய் தன்னந்தனியாக நின்று சிறுவில் தயாரிக்கப்பட்ட 5 பாகிஸ்தான் தாங்கிகளை அழித்துவிட்டார் என்று இந்தியர் பெருமை பாராட்டினார்கள்,

### கார்கில் அரங்கு

கார்கில் அரங்கில் உள்ள பாகிஸ்தானியரின் 27காவல் நிலைகளில் 17 காவல் நிலைகளை இந்திய படைகள் கைப்பற்றியுள்ளதாக அறிவித்தனர். பூஞ்ச் பகுதியில் மேலும் இரு இடங்களை இந்தியர் கைப்பற்றியதாகக் கூறினார்கள்.

காஷ்மீர் பகுதியில் நேற்று குண்டுவீசிய பாகிஸ்தான் விமானங்கள் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கிராம மொன்றிலும் குண்டுகளை வீசியதாகக் கூறப்பட்டது.

## புதிய அரசியல் திட்டம் வரைவர்

வங்காள தேச அரசாங்கத்துக்கென புதிதாக அரசியல் திட்டம் ஒன்று வரையப்படும் என்று வங்காள தேச அரசாங்கத்தின் பிரதம மந்திரியான திரு தாஜுதீன் அகமத் கூறியிருக்கிறார்.

நேற்று ஜெசூர் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவரும் பதில் அதிபர் திரு. நஸ்ருல் இஸ்லாமும் பேசினார்கள். வங்காள தேசமக்கள் ஏராளமாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக நிருபர்கள் கூறினர்.

விடுதலை இயக்க லட்சியங்களை அடிப்படையாக வைத்து புதிய அரசியல் திட்டம் வரையப்படும் என்று திரு. தாஜுதீன் அகமத் கூறினார். புதிய அரசியல் திட்டம் வரையப்படும் வரைக்கும் இப்போதிருக்கும் சட்டங்களே செயல்படுத்தப்படும் என்றும் வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு படைகள் அனைத்தையும் முன்றாக முறியடித்தபின்னர் இந்திய படைகள் வெளியேறிவிடும் என்றும் அவர் கூறினார்,

இந்தக் கூட்டத்தில் பேசிய தற்காலிக அதிபர் நஸ்ருல் இஸ்லாம் வங்காள தேசத்திலிருந்து தப்பி ஓடிய அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் திரும்பி வரும்படியும் திரும்பி வந்து தங்கள் வேலைகளைக் கவனிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வங்காள தேசத்தில் மதத்தின் பேரால் அரசியல் கட்சி எதுவும் இனி இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்;

திரு. நஸ்ருல் இஸ்லாமும் திரு. தாஜுதீன் அகமத்தும் இந்திய படைகளதும், விடுதலைப் படைகளதும் பாதுகாப்புடன் வீதிகளின் வலம் வந்த பொழுது மக்கள் பெரும் ஆரவாரத்துடன் அவர்களை வரவேற்றார்களாம்.

### ஐ நா. விமானம்

டாக்காவிலுள்ள ஐ. நா. ஊழியர்களையும் பிரிட்டிஷ் பிரஜைகளையும் ஏற்றிக் கொண்டு போவதற்காக கனேடிய விமானம் ஒன்றும் பிரிட்டிஷ் விமானம் ஒன்றும் டாக்காவுக்கு சென்றபோது அவைகளை இறங்குவதற்கு அனுமதிக்க அங்குள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் மறுத்து விட்டார்களாம். இந்தியா வழியாக வரும் எந்த விமானத்தையும் இறங்க அனுமதிக்கப் போவதில்லையென அவர்கள் அறிவித்துள்ளதாகத் தெரிகின்றது. டாக்காவிலிருந்து தம் பிரஜைகளை வெளியேற்ற விரும்பும் எந்த நாடும் அங்கு விமானங்கள் போகும் போதும் வரும் போதும் கல்கத்தாவில் இறங்க வேண்டும் என்று இந்தியா ஏற்கனவே நிபந்தனை விதித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலை விஞ்ஞானப் பிரிவு முறைப்போதனை தேசவளர்ச்சிக்குப் பயன்படவில்லை"

## ஜாதிக குரு சங்கமய மாநாட்டில் அமைச்சர் குமாரசூரியர்

யாழ்ப்பாணம், திங்கள்

'குருகுல மரபுச் சகாப்தத்திலிருந்து உலகம் இன்று மாறியுள்ளது. வெகுஜனத்தின் பேரியக்கங்கள் மனித வாழ்வு சம்பந்தமான வேறுபட்ட நிலைகள், வேறுபட்ட செயல்முறைகள் வேறுபட்ட தொடர்புகள் இன்றுகாணப்படுகின்றன. ஆனால் எந்த வகை மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் எந்தச் சமூகத்திலும் மிக உபயோகமான அங்கத்தினர்கள் என ஆசிரியர்களுக்குக்கொடுக்கப்பட்ட ஒப்புமையற்ற இடம் இன்றும் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது'

யாழ். நகர மண்டபத்தில் நடந்த ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்க வருடாந்த மகாநாட்டில், தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. பீட்டர் சில்வா தலைமையில் நடந்த இம்மகாநாட்டில், உதவி தபால்அமைச்சர் திரு பி. பி. ஜி. கருணாரத்ன, உதவி கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை, நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், யாழ் மேயர் திரு அல்பிரட் துரையப்பா கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு சுமதிபால திரு ஏ வைத்திலிங்கம், திரு ஏ செல்வநாதன், திரு பி கதிரவேலு, திரு எஸ் சிவதாசன் வடமாநில கல்வி அதிபதி திரு மாதந்தில ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தபால் அமைச்சர் குமாரசூரியர் மேலும் கூறியதாவது:

"இப்போது ஆண்டுதோறும் ஏறத்தாழ 3,00 000 இளம் பிள்ளைகள் பாடசாலைக்கு புதிதாக வருகிறார்கள். பாடசாலைக்குமுன்ன பாடசாலை நவீன தொழில் பெற்ற தலைவர்ப்படும் குறைந்தபட்ச கல்வி அறிவைப்பெற்று பாடசாலைகளிலிருந்து வெளியேறுகின்ற இளைஞர்கள் ஏறத்தாழ 3,00,000 பெறுக்கு இதே போன்று வேலைவாய்ப்புகளும் தேடிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது.

### பல்கலைக்கழக கல்வி

பல்கலைக்கழகக் கல்வியும் நெருக்கடி ஏற்படக்கூடிய நிலையை இன்று அடைந்துள்ளது. மனித சமூகவளர்ச்சிக்கும் உகந்த கருவியாக பல்கலைக்கழகக் கல்வி அமைவுற வேண்டின் இங்கும் அவசரமாக சீர்திருத்தம்செய்ய வேண்டியிருக்கிறது.

சமூக தரப்புக்களின் அடிப்படையில் நோக்குமிடத்து கல்வியானது பொருளாதார சேமநலன் காணும் வளர்ச்சியின் அமைப்புக்கும் வளரும் திசைக்கும் ஏற்றதாயிருத்தல் வேண்டும். மேலும் காலனி ஆட்சிச் சகாப்தம் விட்டுச்சென்ற முன்னேற்றமற்ற நிலையிலிருந்து அபிவிருத்தியை நாடும் முறை அபிவிருத்தியில் காணும் வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்றதாகவும் கல்வி இருத்தல் வேண்டும். வருங்காலத்தில் விடுதலையையும் வளர்ச்சியையும் காண்பதற்கான வழிவகையினைக் கொடுப்பதாகவும் அமையவேண்டும்.

### மாற்றம்

இன்று இலங்கையில் நாம் இருக்கின்ற சூழ்நிலையை அவதானிக்குமிடத்து கல்வி முழுமுனைத் தோற்றம் கொண்டிருக்க வேண்டும் என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. முதலாவதும் முக்கியத்துவமானதும் என்னவெனில் விரைவாக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவல்லதாகக் கல்வி முறை இருத்தல் வேண்டும்.

தொழிற்சங்க இயக்கத்திலுள்ள உங்களில் பலர் சோஷலிசமாற்றத்தை ஏற்றுக் கொள்ளுவீர்கள். அபிவிருத்தியின்றி வளர்ச்சி காணாத ஒருநாட்டில் பொருளாதாரமுன்னேற்றம் காண்பதற்கு பொருளாதாரத் திட்டமிடுவது எவ்வளவு அவசியமோ இதனை விரைவில் அடைவதற்கு திட்டமிடல் எத்துணை அவசியமோ அதேபோன்று கல்விச் சீர்திருத்தங்களையும் கொள்கைகளையும் திட்டமிட்டு வகுத்து அமுல்செய்ய வேண்டும் மற்றைய இரண்டும் ஏனைய நாடுகளில் கல்விக்குத் தேவையான இரு முக்கிய பண்புகளென விபரிக்கப்பட்டுள்ளன,

இவையாவன: கலை, கிருஷ்டி சம்பந்தமான போதனை பிரிவுகள் ஒன்று. மற்றையது விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றுக்கான போதனை பிரிவுகள். இவ்விரு அம்சங்களைப் பொருத்தமட்டில் தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன, குறிப்பாகத் தேங்கியிருந்த பின் வளர்ச்சி காண்கின்ற நாடுகளில்தான் இந்தத் தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. மிக இளம் பிராயத்திலே மாணவர்களுக்குக் குறித்த ஒரு துறையில் மட்டும் விசேஷ போதனை அளித்துக் கலைப்பிரிவு மாணவர்கள், விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் என வேறுபட்ட தனித்துவம் கொண்ட பிரிவுகளாகப் பிரித்தமை தேச வளர்ச்சிப் பணியில் கல்வி செய்யக்கூடிய உதவியை முற்றுமே ஒழித்துவிட்டது

### தொழிற்சங்கம்

உண்மையில் தொழிற்சங்கங்களின் பாகம் ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதிகள் அனைவருமே ஏற்கும் பாகத்திலும் பார்க்க மிக முக்கியமானதாகும்.

தொழிற்சங்க அங்கத்தினரிடையே மட்டும் ஐக்கியம் நிலவினால் போதாது. பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கும்போதும் கஷ்டமான அரசியல் சமூகப் பிரச்னைகளை எதிர்த்து நிற்கும்போதும் எமது நாட்டிற்கு ஐக்கியம் குறிக்கோளாக இருத்தல் அவசியமாகும். வகுப்பறையில் மட்டும் ஆசிரியர்கள் போதிப்பது போதுமானதல்ல. தொழிற்சங்கக் கொள்கைகள் நடவடிக்கைகள் சம்பந்தமாக நாடு முழுவதற்குமே போதிக்கும் கடமை ஆசிரியர் மீது உளது."

இம்மகாநாட்டில் ஆயிரக்கணக்கான தென்னிலங்கை ஆசிரியர்களும், பெருமளவில் பௌத்த பிக்குகளும் விசேஷமாகக் கலந்துகொண்டனர்.

......

## 'சகோதர மனப்பான்மை ஏற்படவேண்டும்'

தாவடி, ஞாயிறு

அமைச்சர் செல்லையா குமாரசூரியர் திருநெல்வேலி உபதபாலகத்தைத் திறந்து வைத்தார். அப்போது அமைச்சர் பேசியதாவது:-

"சகோதரத்துவ மனப்பான்மை எம்மிடையே உருவாகினால் எதுவித பிளவுகளுக்கும் இடமிராது. தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற முப்பெரும் இனத்தையும் முக்கண்களாகக்கொண்டு வாழுதல் வேண்டும்."

நல்லூர்த் தொகுதி ஆட்சி மன்றஉறுப்பினர் திரு சி. அருளம்பலத்தின் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவின்போது தொடர்ந்து பேசிய திரு. குமாரசூரியர் 'உதவிஅமைச்சர் திரு. கருணாரத்ன என்னுடன் சகல காரியங்களுக்கும் ஒன்றிப் பணிபுரிகின்றார். நாம் இருவராகவல்ல, ஒருவரென்ற முறையில் ஐக்கியத்துடனும், சகோதர மனப்பான்மையுடனும் இவ்விழாவில் கலந்து கொண்டுள்ளோம் என்றார்.

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் தமதுரையில் தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய ஆறுமுக நாவலர் பெருமானுடைய உருவம் பொறித்த முத்திரையை வெளியிட்டு வைக்க முன்னோடியாக விளங்கியவர் எமது தபால் அமைச்சர் என்றே கூறலாம். அன்றைய தினம் முத்திரை வெளியிடுவதற்காக அமைந்த தற்காலிக தபாலகத்தை நல்லை முருகன் ஆலய மேலை வீதியில் நிலைபெற்றிருக்கச் செய்யவும் எண்ணியுள்ளோம் என்றார்.

உதவித் தபால் அமைச்சர் திரு பி பி ஜி கருணாரத்ன பேசியதாவது!

அயல்நாடுகளில் நடந்து வருகின்ற பயங்கர நிலைகளை எண்ணிப் பார்த்து நாம் மிகவும் சாதுரியமாக வாழ முயற்சிக்கவேண்டும் இங்கு நண்பர்கள் பலர் என்னுடன் சிங்களத்தில் கதைத்தனர் நான் தமிழ் சாதாரணமாகக் கதைக்கக்கூடியவன் உங்கள் கலாசாரம் பாரம்பரியமானது போன்றே எமது மொழி, கலாசாரம் என்பனவும் பாரம்பரியமானது. எனவே பாகுபாடின்றி இணைந்து வாழ்வோமாக!

யாழ் நகர மேயர் திரு அல்பிரட் துரையப்பா, வட்டுக்கோட்டை எம் பி திரு தியாகராசா ஆகியோரும் இன்னும் பலரும் விழாவில் கலந்துகொண்டனர்

## சகோதரி மீன்சமைத்ததால் வாலிபர் தற்கொலை

மீசாலை, ஞாயிறு

24 வயதுடைய வாலிபர் கிருமிநாசினி குடித்து மரணமானார். இச்சம்பவம் தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த தவசி இயற்றாலைப் பகுதியில் நடைபெற்றது கணபதிப்பிள்ளை என்னும் இளைஞர் தனது சகோதரியுடன் வாழ்ந்துவந்ததாகவும். இவரது தகப்பனார் ஒருகோயிலை ஆதரித்து பூசைபண்ணி வந்ததாகவும் தகப்பனார் இறந்தபிறகு இவ்விளைஞரே அதை நடத்தி வருவதால் மீன் மாமிசம் புசிப்பதில்லையென்றும் சகோதரி மீன்கறி சமைத்ததை சகிக்கமாட்டாமல் கிருமிநாசினி குடித்து மரணமானாரென்றும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கே திரவியநாயகம் மரண விசாரணையின்போது தற்கொலையென்று தீர்ப்பளித்தார்.

## புதிய சமாதான நீதவான்கள்

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை, மயிலிட்டி, மல்லாகம் உள்ளூராட்சிமன்றங்களின் உப- தலைவர்கள் சமாதான நீதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம் கிராமசபையின் உப- தலைவரும், 15ம் வட்டார உறுப்பினரும், வழக்கறிஞருமான திரு சிவ இந்திரன் சமாதான நீதிபதியாக மல்லாகம் நீதிபதி திரு ஏ சிவானந்தன்முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மயிலிட்டிக் கிராமசபையின் உபதலைவரான திரு. கெ மகேஸ்வரன், தெல்லிப்பழைக் கிராமசபை உப-தலைவரான திரு எஸ் காசிலிங்கம் ஆகியோர் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் சிபார்சின்படி சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

......

## நேரத்துக்கு கிடைப்பதில்லை

மாவிட்டபுரம், ஞாயிறு

அரசாங்க வர்த்தமானி இப்பகுதியில் உள்ள உபதபால் நிலையங்களுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்கும் வந்து சேராததால் இப்பகுதியில் உள்ள வேலையற்ற வாலிபர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதம் 19-ம் திகதிய வர்த்தமானியை அடுத்து இதுவரை வர்த்தமானிகள் இங்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்ஹோர்ன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

